திராவிடநாடு

விலை அணா 2   ஆண்டுசந்தா ரூ 7   இலங்கை 15 சதம்   வெளிநாடு 12 காசு

மலர் 7 | 13-3-49 | இதழ் 37

பாராட்டுகிறோம்—வரவேற்கவில்லை

ஆறாயிரம் கல் தொலைவுக்கு அப்பாலுள்ள ஆங்கிலேயன் இங்கு வந்து நம்மை அடக்கி ஆள்கிறான்! அநியாய வரி போட்டு அள்ளிக்கொண்டு போகிறான் நம் பணத்தையெல்லாம்! கொள்ளையடிக்கிறான்! கொடுங்கோலாட்சி புரிகிறான்! பேச்சுரிமை இல்லை! எழுத்துரிமை இல்லை! எடுத்ததற்கெல்லாம் அடக்குமுறை போடுகிறான்! ஏன் என்று கேட்பாரில்லை! உப்புக்கும் வரி! ஊரிலுள்ள பொருள்கள் அனைத்திற்குமே வரி! ஒண்டவந்த பிடாரி ஊரை ஆள்வதா? ஊரை ஆளும் திறமை நமக்கில்லையா? நாம் என்ன, எவரேனும் ஒருவருக்கு அடிமைப்பட்டுத்தான் வாழவேண்டுமென்று கூறும் கூட்டத்தாரின் வாரிசுகளா? நம்முடைய நாட்டை நாம்தானே ஆண்டுகொண்டிருந்தோம். ஏன் இன்று அடிமைபட்டுக் கிடக்கிறோம்? நம்மை அண்டிப் பிழைக்க வந்தவனா நம்மை ஆள்வது? தான் பிழைக்கலாம் என்று வந்தவன், நம்முடைய பிழைப்பிலேயே மண்ணைப்போட்டுவிட்டானே! பிச்சை எடுக்க வந்தவனிடம் இச்சகம் பேசி வாழ்வதா? பெருமைக்குரியதா இது? எந்த நாடாவது இந்த இழிநிலை அடைந்ததுண்டா? நேர்மையா? முறையா? இனியும் நாம் வாளா இருப்பதா? நம்முடைய நாடு நமதென்பதை உணர்ந்த பின்னரும்—உணரும் நிலைமையை அடைந்த பின்னரும் நாம் அடிமை வாழ்வு வாழ்வதா? அடுக்குமா இது?

*   *   *

வெள்ளையனை இந்நாட்டைவிட்டு விரட்டுவதற்காக நம்நாட்டுத் தலைவர்களால் பேசப்பட்டது இவ்வாறெல்லாம். இவற்றையெல்லாம் கேட்ட பொதுமக்களும் தங்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் தாராளமாக வழங்கி நாட்டை அடிமைத் தளையினின்றும் விடுவிக்க உதவிபுரிந்தனர். நாடு விடுதலையடைந்துவிட்டது! சுயராச்சியம் நடைபெறுகிறது! ஆனால்......!

*   *   *

அந்நியன் போய்விட்டான்; ஆனால் அவன் தன்னுடைய சுயநலத்துக்காக உண்டாக்கிக் கையாண்ட அடக்குமுறைப் பாணங்கள் இன்னும் போகவில்லையே — போகும்படி செய்யவில்லையே! இதுதானா மக்களாட்சி என்று திராவிடர் கழகத்தான் கேட்கிறான். அந்நியர் ஆட்சியின்மீது மக்களால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் நம்மவர் ஆட்சியின்மீதும் சுமத்தப்படுமானால், அதற்குச் நல்லாட்சு என்று பெயரா என்பதாகத் திராவிடர்கழகத்தான் கேட்கிறான். அந்நியன் ஆட்சியில் இருந்த கேட்டை ஒழிக்காவிட்டாலும், புதியகேடுகளையாவது நாடாளவந்த "நம்மவர்கள்" உற்பத்தி செய்யாமல் இருக்கக்கூடாதா என்று திராவிடர்கழகத்தான் கேட்கிறான். பாலாற்றைக் காவிரியாக்காவிட்டாலும், பாலாற்றை மேலும் பாலைவனமாக்கும் திட்டத்தையாவது வகுக்காமல் இருக்கக்கூடாதா என்று கேட்கிறான். இருக்கிற வரியை எடுக்காவிட்டாலும் புதுவரி போடும் "புண்யகாரியத்தை"யாவது செய்யாமல் இருக்கக்கூடாதா என்று கேட்கிறான். ஏழை பணக்காரன் என்ற வேறுபாட்டை நீக்க முடியாவிட்டாலும், பணக்காரனையே மேலும் பணக்காரனாக்கும் பாதகத்தையாவது செய்யாமல் இருக்கக்கூடாதா என்று கேட்கிறான். பாடுபடுபவன் ஒருவன், பலன் அனுபவிப்பவன் இன்னொருவன் என்ற பாதகத்தை மாற்றியமைக்க முடியாவிட்டாலும், பாடுபடுபவனை மேலும் பராரியாக்கும் பணியையாவது செய்யாமல் இருக்கக்கூடாதா என்றுகேட்கிறான். சுயராச்சியம் பெற்றதால்சுக வாழ்வு ஏற்படாவிட்டாலும், சிலர் பலரைச் சுரண்டிவாழும் சுயநலப் போக்கையாவது மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாதா என்று கேட்கிறான். மதத்தைச் சீர்திருத்தியமைக்கமுடியாவிட்டாலும், மதச்சார்பற்ற ஆட்சியை நடத்துவதாகச் சொல்லிக்கொள்ளும் சர்க்கார், மழை பெய்வதற்கு மகேசுவரன் சந்நிதியில் "வருண ஜெபம்" செய்யும்படி கட்டளையிட்டு, மக்களை ஏமாற்றுமலாவது இருக்கக்கூடாதாஎன்று திராவிடர் கழகத்தான் கேட்கிறான்.

விஞ்ஞானம் நாளுக்குநாள் வளர்ச்சியடைந்து வருகிறது. இயற்கை அமைப்புகளை எல்லாம் மனிதன் தன் வசப்படுத்தும் ஆற்றலைப்பெற்றுத் தன்விருப்பப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறான். வருண ஜெபத்தால் மழை பெய்யாது என்பதனை இன்றைய விஞ்ஞானி [illegible]

துக்காட்டிவிட்டான். இந்த நிலையிலும் மந்திரம் ஓதி மழையை வரவழைக்கும் மாயாஜால வித்தையை ஒரு மதச்சார்பற்ற சர்க்கார் மேற்கொள்ளலாமா என்று கேட்கிறான். மந்திரம் ஓதினாயே! மழை பெய்ததா? வயல் விளைந்ததா? வறுமை நீங்கிற்றா என்று கேட்கிறான். நாடு சுதந்தரம் பெற்றுவிட்டதென்றபோதிலும், நாட்டில் வாழும் மக்கள் இன்னும் நல்லாட்சி பெறவில்லை என்று திராவிடர்கழகத்தார் கூறுகின்றனர். இந்த உண்மை இது வரை மறுக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வந்திருக்கிறது. காரணம், இந்த அரிய உண்மையை மக்கள் அறியும் வாய்ப்பை ஆளவந்தார்களும், அவர்கள் எதைச் செய்தாலும் அது நல்லதோ கெட்டதோ எதுவாயினும் அவர்களை ஆதரிப்பதே அறிவுடைமை என்ற அறியாத்தனத்தில் மூழ்கிக்கிடக்கும் பத்திரிகைகளும் மறைத்து விட்டன.

பெற்ற சுதந்தரத்தால் நம் அனைவருக்கும் பொதுவாக இருந்த ஒரு விரோதி ஒழிந்தானே என்பதனால் மகிழ்ச்சியடைந்தோமேயன்றி, நம்முடைய மனக்குறைகள் தீரும் வகையில் நாம் நல்லாட்சி இன்னும் பெறவில்லை என்று கூறினோம். பலவகையில் பிரிந்து வாழும் பண்போடுள்ள மக்களைக் கொண்ட இவ்வுபகண்டத்தை ஒன்றாக்கிக்காட்டி உரிமை வழங்கவேண்டுமென்று கேட்டால், அது ஒருபோதும் கைகூடாதென்று காரணகாரியங்களைக் காட்டி விளக்கினோம்—வீண்வம்பு செய்வதாக ஏசப்பட்டோம்

வெள்ளையன், தன்கண்களுக்கு விளக்கமாகத் தெரிந்த இந்து—முஸ்லீம் பிளவைக் காட்டிச், சுதந்தரம் வழங்க மறுத்தான். அந்த மறுப்புரைக்கு மாற்றுமருந்து காணமுடியாதென்பதை உண்மையாகவே உணர்ந்த காந்தியார், நிலைமை நியாயமென்பதை ஒப்புக்கொண்டு, இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் தனித்தனியாகச் சுதந்தரம் வழங்கும்படி கேட்டுக்கொண்டார். இந்தச் சந்தர்ப்பத்தை, ஆங்கில அரசாங்கம், ஏற்கெனவே தனக்கு ஏற்பட்டுள்ள ஏகாதிபத்ய விழ்ச்சியையும், அதற்கேற்பத் தன்னுடைய பிடிகளைத் தளர்த்திக் கொள்ள வேண்டுமென்பதையும் உணர்ந்து பயன்படுத்திக் கொண்டது. காலமாறுதல், ஏகாதிபத்ய எடுபிடி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி போட்டுவருவதை அவர்கள் உணரும் நிலை ஏற்பட்டதும், இங்குள்ளவர்களின் விடுதலைக் கிளர்ச்சி வலுத்துக் கொண்டிருந்ததும் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயரைத் திக்குமுக்காடும்படி செய்யவே அவர்கள் வேறுவழியின்றி, நாட்டுக்கு விடுதலையளித்து விட்டு வெளியேறி விட்டனர்.

ஆனால், இந்நாட்டிலுள்ள ஆரிய—திராவிடப் பிளவையும், அதற்குரிய முக்கியமான காரணங்களையும் ஆங்கிலேயரால் உணர முடியவில்லை—உணர முடியும்படி செய்யப்படவில்லை——செய்யப்பட்ட போதிலும், அது அவர்களுக்குத் தெரியவிடாமல் மறைக்கப்பட்டது. எனவேதான், இந்து மூஸ்லீம் பிளவை உணர்ந்து அதற்கேற்ப நாட்டைப் பிரித்துக்கொடுக்குமளவுக்கு விஷயங்களை உணர்ந்த ஆங்கில அரசாங்கத்தால், ஆரிய—திராவிடப் பிளவையும் அதற்கேற்ப அவர்களுக்குச் செய்ய வேண்டிய காரியத்தையும் செய்ய முடியாமல் போய்விட்டது. என்றபோதிலும், திராவிடர்களாகிய நாம் நம்முடைய கொள்கைகளையும், நமக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான உரிமைகளையும் நாட்டு மக்களுக்கும் ஆளவந்தார்களுக்கும் எடுத்துக்கூறாமல் இருந்துவிடவில்லை —— நம்முடைய பிரசாரம் வீண்போகும் என்ற பீதியையும் நாம் அடையவில்லை. சமுதாயத் துறையிலே ஆரியமும், அரசியல் துறையிலே வடநாட்டு ஏகாதிபத்யமும் நம்மை ஆட்டிப்படைக்கும் அலங்கோலங்களையெல்லாம் நடுவுநிலை திறம்பாது நின்று கூறிக்கொண்டுதான் வருகிறோம். ஆரியம் செய்துவரும் அட்டூழியங்கள் பலவற்றை இன்று ஆளவந்தார்களே உணர்ந்து அவற்றிற்குப் பரிகாரம் தேட முற்பட்டு விட்டனர். ஆனால், அரசியல் துறையிலே வடநாட்டு ஏகாதிபத்யம் செய்யும் அட்டூழியங்களை ஒழிக்கும் ஆண்மை இன்னும் நம்மாகாண அமைச்சர்களுக்கு உண்டாகவில்லை என்றபோதிலும், வடநாடு தென்னாட்டின்மீது ஏகாதிபத்யம் செலுத்துகிறது என்பதை மட்டும் ஓரளவுக்கு உணர்ந்துகொண்டு வருகிறார்கள் நம் அமைச்சர்கள். பொறுப்புகள் வளரவளர மேலும் பல உண்மைகளை நம்மை ஆளவந்த அமைச்சர்கள் உணர்வார்கள்—உணரும் நிலை அவர்களுக்குத் தானாகவே உண்டாகும். அப்போதுதான் நாம் அவர்களுடைய கண்களில் படுவோம். திரும்பிப் பார்ப்பார்கள் 'ஓ! இவர்கள் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களா?' என்ற எண்ணம் பிறக்கும். உடனே கண்களைமூடிக்கொள்வார்கள். பிறகு அவர்களுடைய கருத்தில் திராவிடர் கழகம் இடம் பெற்று விடுகிறது. கண்களை மூடலாம்; ஆனால்கருத்தை மூட முடியாதே! புண்ணைப் பார்க்கக் கூடாதென்று நினைப்பவன் கண்ணை மூடலாம்——புண் தெரியாது. ஆனால் புண்ணால் ஏற்படும் வலி எண்ணத்தில் கலந்து கருத்தைக் குடையுமே! அப்போது அவனால் கருத்தை மூட முடியுமா? அது போன்ற நிலை தான் இன்று காங்கிரஸ் அன்பர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவனா இவன்? இவனுடைய முக தரிசனமே கூடாது——கருப்புச் சட்டைக்காரனா? கடைக்கண்ணாலும் பார்க்கக் கூடாது என்று கதராடைக் காங்கிரஸ் அன்பர் கருதுகிறார். உடனே, திராவிடர் கழகத்தான் கூறினால் என்ன? அவனுடைய திட்டம் நாட்டுக்கு ஏற்றதாகத்தானே இருக்கிறது. கருப்புடை அணிந்திருந்தால் என்ன? நாவல் பழம் கூடக் கருப்பாகத்தான் இருக்கிறது; ஆனால் அதன் சுவை, இன்னும் ஒரு பழம் கூடச்சாப்பிடலாமா என்ற அவாவை அல்லவா உண்டாக்கி விடுகிறது. அதுபோலக் கருப்புடைக்குள் இருந்து கிளம்பும் கருத்துக்கள் காலப் போக்கிற்கும் நடைமுறைக்கும் ஏற்றவையாகத்தானே இருக்கின்றன—ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும் என்ற எண்ணம் பிறக்கிறது. உடனே அந்த எண்ணம் வேறு வடிவில் வெளிவருகிறது. கருப்புடைக்குள் இருந்து கிளம்பிய கருத்துக், கதருடைக்குள் புகுந்து கனம் (மதிப்பு) பெற்று வெளிவருகிறது.

* * *

நாட்டை ஆள்வதற்குப் பணம் வேண்டும். ஆனால் பணம் இல்லை. இல்லையா? இருக்கிறது – ஆனால் இங்கே இல்லை – வேறொரு இடத்துக்குப் போய்விடுகிறது – நம்முடைய பணம் நம்முடைய நாட்டை ஆள்வதற்குப் பயன்படாமல் வேறு இடத்துக்குப் போய்விடுகிறது – இல்லை – போகும்படி செய்யப்படு

(11-ம் பக்கம் பார்க்க)

காந்தியடிகளுக்கு

12-ம் பக்கத் தொடர்ச்சி

அதே நிலையில் தான் இன்று அரசாங்க ஊழியர்கள் அதிகாரிகளின் முன்னின்று தவிக்கிறார்கள்.

"ஒவ்வொரு ஊழியரும் தமது பத்து நாள் ஊதியத்தை காந்தி நிதிக்குத் தாமாகவே கொடுக்கக் கட்டாயமாக முன்வர வேண்டும் (should voluntarily contribute) என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது.

கட்டாயமல்ல என்ற பீடிகையுடன் கட்டளையிடும் உத்தரவைக் கண்டு படிப்படியாக அமைந்துள்ள அதிகாரிகள், கீழ் உள்ளவர்களை நெருக்க, கீழ்ப்படியிலுள்ள பள்ளி ஆசிரியர்களும், ஆபீஸ் குமஸ்தாக்களும் மிகவும் பாதிக்கப் படுகின்றனர். வருடம் ரூ 300-க்குக்குறைந்த ஊதியம் பெறுபவர்களிடம் வசூல் செய்யக்கூடாது என்று காந்தியடிகளின் கடைசிப் புதல்வர் தேவதாசர் சென்னையில் அண்மையில் கூறினார். ஆயினும் சர்க்கார் கட்டளை மாதம் 12-ரூபாய் பெறும் பள்ளிக்கூடத்துப் பியூன் முதலிய சிப்பந்திகளையும் பாதித்திருக்கிறது.

பணப் பெருக்கம் எனும் வெள்ளம் தலைக்குமேலே சென்றும் அதற்கேற்றபடி வருமானம் உயரமுடியாதபடி கட்டுப்படுத்தப்பட்ட சம்பளம் வாங்கும் நடுத்தர உத்தியோக வர்க்கத்தார், வாழ்க்கை கட்டுபடியாகாமல் உயிருக்குமன்றாடி மூச்சுத்திணறித் தத்தளித்துக் கொண்டிருக்கும் நேரத்திலே நன்கொடை கொடுக்க எவ்வாறு முன்வரமுடியும்?

சம்பளஉயர்வு கேட்பவர்களிடமே நன்கொடை கொடு என்று கேட்பது அவர்களைப் பரிகசிப்பதுபோல் ஆகாதா?

பணப்பெருக்க வெள்ளம் எவ்வளவு உயர்ந்தாலும் அதற்கு மேலும் கப்பலோட்ட வல்ல மேல்வர்க்கத்தார், அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் அளவு குறையாத செல்வம் படைத்தவர்கள் இவர்களெல்லாம் காந்தி நிதிக்கு பத்துநாள் வருமானத்தைக் கொடுக்கவில்லை. பல லட்சம் கொடுக்கத் தகுதியுள்ளவர்கள் சில நூறு கொடுத்து விட்டு விளம்பரம் பெற்று விட்டனர்.

தவணைகள் பல நீட்டிவைத்தும், தலைவர்கள் நாள்தவறாது வேண்டுகோள்கள் விடுத்தும், அரசாங்கம் தன் செல்வாக்கை உபயோகித்தும் தாய் நாட்டைக்காத்த தரும சிலருக்கு எதிர்பார்த்த அளவுக்கு நிதி திரளவில்லை. திலகர் நிதிக்கு 1-கோடிக்குமேல் வசூலாயிற்று. ஏழாண்டுகளுக்கு முன் கஸ்தூரிபாய் நிதிக்கு சில லட்சங்களே கேட்டார்கள்; 1 கோடிக்கு மேல் வசூல் ஆயிற்று. இன்று காந்தி நிதிக்கு 30 கோடி கேட்கிறார்கள். மூன்று கோடி கூட வசூல் ஆகவில்லையே. காரணம் என்ன?

பணம் படைத்த மேல்வர்க்கத்தாருடைய அசட்டையே காந்திநிதித் தோல்விக்குக் கண்கண்ட காரணம். அன்று காந்தி உயிரோடிருந்தார். அவர் தயவு தேவைப்பட்டது பணக்காரர்களுக்கு. அள்ளி அள்ளிக் கொடுத்தனர். இன்று அவர் இறந்து விட்டார். இனி அவர் தயவு தேவையில்லை. ஆதலால் நிதி வெளியேறவில்லை.

கட்டாயம் இவர்களிடத்திலன்றோ காட்டவேண்டும்? ஜமீன்தாரர்களுக்குக் கொடுக்கும் நஷ்டஈடு 18 கோடியிலே ஒரு பகுதியை அண்ணலின் நிதிக்குக் கொடுத்தால் போதுமே. அகில இந்தியா முழுதும் நூறு கோடிக்குமேல் திரட்டிவிடலாமே.

புளியேப்பக்காரர்களிடம் காட்ட வேண்டிய கட்டாயத்தை பசியேப்பக்காரர்களிடம் காட்டினால் அவர்கள் என்ன செய்வார்கள். பாவம்! தேள் கொட்டியதுபோல் திகைக்கிறார்கள்.

அங்கே ஏழையின் முன்னே நின்றான் திருடன். இங்கே ஊழியர் முன்னால் நிற்கிறது அரசு. அங்கே திருடன் கையில் வேல் ஆயுதம். இங்கே அரசின் கையில் கோல் ஆயுதம். அங்கே விழி உருட்டுகிறது. இங்கே கட்டளை பேசுகிறது. அங்கே அவன் வேலைக்காட்டி இடு என்றான். இங்கே அரசு கோலைக் காட்டிக்கொடு என்று கேட்கிறது. இரண்டிற்கும் வேற்றுமையில்லை.

"கட்டாயமில்லை. நன்கொடைதான். மனமுவந்து கொடுங்கள்" என்று அதிகாரத்திலுள்ளோர் எவ்வளவுதான் நயந்து கேட்டாலும், அது கீழேயுள்ளவர்களுக்குக் கட்டாயமாகவே ஒலிக்கும். கிலியூட்டும். இந்தக் கருத்தை இன்றல்ல. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளுவர், தமது நூலில் கொடுங்கோன்மை என்னும் அதிகாரத்தின் கீழ்,

> "வேலோடு நின்றான் இடு
> என்றது போலும்
> கோலோடு நின்றான் இரவு"

என்று அழகுபடக் கூறியிருக்கிறார். இந்த உண்மையை அரசாங்கத்தார் கட்டாயம் அறிந்திருக்கவேண்டும். அவர்கள் விடும் வேண்டுகோள் அடியிலுள்ள சிப்பந்திகளுக்குக் கட்டாயம் என மொழி பெயர்க்கப்படும் அபாயம் இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்துதானிருப்பார்கள்.

அன்று வெள்ளை ஏகாதிபத்யம் யுத்த நிதி வசூலித்த காலையில் கூட ஆசிரியர், குமஸ்தா முதலிய கீழ்ப்படியிலுள்ளவர்கள் அதிகமாய்ப் பாதிக்கப்படவில்லை. பயமுறுத்தப்படவில்லை. ஆனால் இன்று சொந்த அரசாங்கத்திலே, காந்தி நிதி வசூலின்போது, அதிகாரிகளின் நடத்தையால், உத்தியோகம் மாற்றுதல், பழிவாங்குதல் முதலிய அச்சம் தலைக்குமேலே தொங்குகிறது.

கல்விக்காக நிதிகொடுங்கள் என்று கேட்க வந்த பாரதியார்,

> "நிதி மிகுந்தவர் பொற்குவை
> தாரீர்,
> நிதி குறைந்தவர் காசுகள்
> அருளீர்,
> அதுவுமற்றவர் வாய்ச் சொல்
> அருளீர்"

என்றுதான் வேண்டினார். ஆனால் இன்று காந்தி நிதிக்கு,

> "நிதி மிகுந்தவர் காசுகள்
> அருளீர்,
> நிதி குறைந்தவர் வெள்ளிகள்
> அருளீர்
> அதுவுமற்றவர் பொற்குவை
> தாரீர்"

என்று கேட்பது போலிருக்கிறது. இது அரசாங்கத்தின்மீது வெறுப்பாக மாறி, காந்தியடிகளிடம் கொண்டிருந்த கொஞ்சநஞ்சம் பக்தியையும் பறக்கடித்து விடும் என்று அஞ்சுகிறோம். அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீரில் நனைத்து ஏழைக் குமஸ்தாக்களும், ஆசிரியர்களும் கொடுக்கும் பணம் காந்தியின் ஆத்மாவைச் சாந்தி பெறச் செய்யாது.

கொடுப்பதற்குச் சக்தியும், சர்வ சுதந்திரமும் உள்ள மேல்வர்க்கத்

(அடுத்த பக்கம் பார்க்க)

1942--1948

—❀—

1942

கமலா:— என்டி, காந்தா! உன் புருஷன் இப்படிச் சிக்கிக்கொண்டு தவிக்கிறரே. புத்தி சொல்லி இருக்கக்கூடாதோ! அடிமே! என்னமோ, தேச சேவை, தேச சேவைன்னு சொல்லிண்டு, தண்டவாளத்தைப் போய்ப் பெயர்த்தா, சும்மா இருப்பாளோ, சர்க்கார்லே—துரதிர்ஷ்டம், சிக்கிண்டார் போலீசிலே.

காந்தா:— ஆமாம், அவர் வந்த வழி அது. அதற்கு என்னடிம்மா செய்யலாம். என்னமோ போறாத வேளை. ஆனா, பிடிந்த போலீஸ் ஆபிசர், பேசாமே அவரைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லாமப் படிக்கு..........

கமலா:— அதைப்பத்திச்சொல்லத் தான்டி வந்தேன்......

காந்:— கொஞ்சங்கூட ஈவு இரக்கம இல்லாமப்படிக்கு, எங்க ஆத்துக்காரரை அடிச்சி இம்சித்தானும் அந்த ஆபிசர்.

கம:— இதைக் கேள்டி, காந்தா...

கா:— கேட்டதிலிருந்து, வயிறு எரியறது. அவனுக்குப் பகவான் சரியாகக் கூலி தராமப் போவாரா...

கம:— காந்தா, சபிக்காதே, இதைக் கேள்டி......

காந்:— தண்டவாளத்தைப் பேர்த்தா, என்னடிம்மா? அவர் என்ன கொள்ளைக் கூட்டமா, கொலைகாரக் கூட்டமா? தேசசேவையிலே அதுவும் ஒன்னு என்று எண்ணிச் செய்தார். சட்டத்திலே அது குத்தம்னு இருந்தா, அதன்படி தண்டிக்கறது, இம்சிக்கிறதா அதுக்காக, மனுஷத்தனமா இல்லாமே...... என் வயிறு எரியறதேடி......அவன் வாழ்வனு......

க:— காந்தா! காந்தா! உன் வாயினலே, சபிக்காதே :..... வேண்டாம்......இதைக் கேள்டி......ஆபிசர் வேறே யாரும் இல்லேடி, என் தம்பிதான்டி ......

கா:— உன் தம்பியா! என்டி கமலா! உன் தம்பியா, மிருகம்போல நடந்துண்டான். என்டி! அவன் மனுஷன் தானடி! கல்நெஞ்சக்காரன் ......குழந்தை குட்டிகள் இருக்கேடி அவனுக்கு, இப்படிச் செய்ய எப்படி மனசு வந்தது.

க:— அதைச் சொல்லத்தானேடி வந்தேன் — அழாதே — போறாத வேளை — என் தம்பி, இம்சித்திருக்க மாட்டானும் — ஆனா, மேலதிகாரிகள் கூடவே இருந்ததாலே, கொஞ்சம் கடுமையா நடந்துகொள்ள வேண்டி வந்ததாம்.

கா:— என் வயித்தெரிச்சலைக் கிளறுதேடி ...... கொஞ்சம் கடுமையா, கொஞ்சம்! கால் எலும்பு முறிந்து போச்சின்னு டாக்டர் சொல்கிறன், நீ, உன் தம்பிக்காகப் பரிஞ்சு பேசறியோ, பிரமாதமா......மேலதிகாரி இருந்தா என்னடி! இவன் மனுஷனு இருந்தா, சார்! இவரை எனக்குத் தெரியும் நன்னு — இவர் சாது — கெட்ட காரியம் செய்ய மாட்டார்னு; சொல்லி இருப்பானே — நாக்கு புழுத்தாப் போகும்......?

க:- உன்புருஷன் அடிபட்டது கேட்ட துக்கத்தாலே ஆத்திரமாப் பேசறே, காந்தா! மேலதிகாரிகளிடம், இதுபோலப்பேசினு, உத்யோகம் நிலைக்குமோ......

கா:- உத்யோகம் —— உத்யோகம்! பாழாய்போன உத்யோகத்துக்காக, உத்தமிகளோட வயிறு எரிஞ்சாலும் பரவாயில்லைன்னு நடந்து கொள்றதோ. கமலா! நேக்கு, முன்னமே தெரியாது, அந்த ஆபீசர் யாருன்னு...உன் தம்பிதானு, அந்தப் படுபாவி—அவன் வாழமாட்டான்டி. ...வயிறெரிஞ்சி சொல்றேன் ... அவன்குடும்பம் விளங்காதுடி...... என் திருமங்கல்யத்துமேலே ஆணை வைச்சிச் சொல்றேண்டி. அவன் வாழமாட்டான், வாழமாட்டான், வாழமாட்டான்.........

க:- காந்தா! உன்னிடம் வந்து நான் நாலுநாழியா, நிலைமையை விளக்கிச் சொல்லிண்டிருக்க இருக்க, நீ, என் எதிரிலேயே, வாய்க்கு வந்தபடி எல்லாம் சபிச்சிக் கொட்றே-- தர்மமில்லே இது. ஆமாம், அவ்வளவு தான் சொல்வேன். ஆபீசரனு, அவன், அவனுடை டியூடியைச் சரிவரச் செய்யவேண்டாமோ? உன் ஆத்துக்காரரு, என்னமோ, தண்டவாளத்துக்கு அடியிலே சுயராஜ்யம் பதுங்கிண்டிருக்கிறமாதிரி எண்ணிண்டு, அதைப் பெயர்த்தா, சர்க்கார், தண்டிக்கிரு. சாபிச்சிக்கொட்டறியே! என்தம்பி, என்னசெய்ய முடியும்? உத்யோகம் அப்படிப் பட்டது......

கா:- உத்யோகம்—பெரிய ஆபீசர்-நிலைக்கும்டி உத்யோகம். நன்னு நிலைக்கும். இப்ப, இவன்போன்றவா, செய்கிற அக்ரமத்துக்கு......

கம:- ஆண்டவன் கூலிகொடுப் பார்னுதான் சாபிக்கிறயே......

கா:- ஆண்டவன், அப்பறமாச் செய்வார், இப்ப, இன்ன கொஞ்ச நாள்லே, சுயராஜ்யம் வந்ததும்பார்டி, அவா, படப்போற பாடுகளை — உத்யோகமா இருக்கும் இவாளுக்கெல்லாம்--இப்ப இவா செய்ற அக்ரமத்துக்கெல்லாம், வட்டியும் முதலுமாத் தீர்த்துத் தந்துவிட்டுத் தாண்டி, மறுவேலை பார்ப்பா. இந்தக் கண்ணுலே, அதைப் பார்க்கத்தானே போறேன்—இந்தக் காதாலே, அதைக் கேள்விப்படாமலா இருக்கப் போறேன். ஒரேவரியிலே இவாளுடைய உத்யோகமெல்லாம், 'டிஸ்மிஸ்' ஆகி,இவாளுடைய நடவடிக்கைகளை விசாரித்து, தண்டிக்காமல் இருக்கப்போறளோ! எங்க ஆத்துக்காரருக்கு ஏற்பட்ட கஷ்டத்துக்காக, நான் அழறபோது, என்னைத் தேத்த வந்துட்டயே, தம்பிக்கு ஏத்த அக்கா, நீ, அதுபோல உன்

(10-ம் பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

தாரிடம் காட்டவேண்டிய கட்டாயத்தைக் கீழ்வர்க்கத்தாரிடம் காட்டலாமா? அவர்கள் பதவி அடிமைகள், வாயில்லாப் பூச்சிகள் என்பதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு கசக்கிப் பிழியலாமா? இதுதான் அஹிம்சையா? இதுதான் சத்தியமா? எந்தச் சிப்பந்தியாவது மனதாரப் பத்து நாள் சம்பளத்தைக் கொடுத்திருப்பானு! கொடுக்க முடியுமா இந்தக் கொடுமை நிறைந்த நாட்களிலே? ஏழைகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு சேர்க்கும் காந்தி நிதி காந்தியடிகளுக்கு எதிர்ப் பிரசாரமல்லாது வேறு என்ன?

—✻—

கல் சுமந்த கசடர்

I

காட்சி 1.

இடம்:— வீரர் கூடாரம்.

காலம்: — மாலை

உறுப்பினர்:— **வீரர்.**

நிலைமை: — [ஒரு வீரன் பாடுகிறான் மற்றவர் இரசிக்கின்றனர். மற்றோர் வீரன் ஓடிவருகிறான். பாட்டைக் கேட்கிறான். கேட்டுவிட்டு]

வீரன்:— எதன்மேல்ஆணை? எதன் மேல் ஆணை?

பாடிய வீரன்:— ஏன்? தாயின் மேல் ஆணை. தந்தைமேல்ஆணை. தமிழக மேல் ஆணை.

வீ:— தமிழகமீது ஆணையா! உண்மையாகவா?

பா. வீ:— என்ன நண்பா உனக்குத் திடீரென்று சந்தேகம் வந்துவிட்டது.

வீ:— நண்பா! தாயின்மேல் ஆணையிட்டு, தமிழகத்தின் மானத்தைக் காக்கப்போரிடும் வீரர்கள் நாம். ஆனால் இதனை வெறும் வீண் பேச்சு என்று கருதுகிறார்கள்.

பா. வீ:— யார் அத்தகைய அறிவாளிகள்!

வீ:— நாம் வாயாடிகளாம். நமது மன்னனும் அப்படித்தானும். நாம் ஏதும் செய்யமாட்டாதவர்களாம்.

பா. வீ:— சொன்னவன் யார்? அதைக் கேட்கும்போது நீ மரமாகவா நின்றாய்?

வீ:— இல்லை. காற்றென ஓடிவந்தேனிங்கு. பங்கப்படுத்தும் அந்த மாபாவிகளின் மண்டைக் கர்வத்தை மன்னனிடம் கூற ஓடோடி வந்தேன்.

பா. வீ:— என்ன துணிவு! எவனுக்குப் பிறந்ததந்த ஆணவம்! எங்கே இருக்கிறான் அந்த மரமண்டைக்காரன்? அங்கத்திலா? கலிங்கத்திலா? எங்கேயிருக்கிறான்? யாரவன்?

வீ:— தமிழனை, தமிழகத்தை, தமிழ் மன்னனை, நமதுசேரன்செங்குட்டுவனை இழிவாகப் பேசியவர்கள் அங்கத்திலே இல்லை, கலிங்கத்திலேயில்லை, கங்கைக் கரையிலே உள்ளனர் அக்கயவர்கள், கனகன் விஜயன் என்பது அக்கசடரின் பெயர்.

பா. வீ:— ஆரிய மன்னர்களா?

வீ:— ஆம்! அந்தப்பதர்கள்தான். அடங்கிக் கிடந்த கூட்டம் ஆர்ப்பரிக்கிறது. கைகட்டி வாய்பொத்தி நின்ற கூட்டம் கொக்கரிக்கிறது. நமது தமிழரைக் கேவலமாகப் பேசுகிறது.

பா. வீ:— ஆகா! வீரரை வீணர் கேலி செய்தனரா? போருக் கஞ்சாத நம்மை புரட்டர் கூட்டம் இகழ்ந்து பேசிற்றா? என்ன காலம்! என்ன கோலம்! கனக விஜயருக்கு காலம் முடிந்து விட்டதோ! இந்தக் கர்வங் கொள்ள! புலியைப் பூனை போருக் கழைக்கிறதா? புறப்படுங்கள் போவோம் நமது பூபதியிடம், அந்தப் புல்லரின் விஷயத்தைக் கூறுவோம். போருக்குக் கிளம்புவோம்.

வீ:— அந்த ஆரியமுடி தாங்கிகளை அடித்து நொருக்குவோம்.

காட்சி 2.

இடம்:- சேரன் மாளிகை

காலம்:- காலை

நிலைமை:- சேரனும் ஒரு புராணீகனும் தனியாகப் பேசிக்கொண்டிருக்கின்றனர்: புராணீகன் இராமாயணக் கதையைக் கூறுகிறான்.

புரா:- ஆரண்யத்திலே ஸ்ரீராமச்சந்திரர் சீதாபிராட்டியாரைத் தேடித்தேடியலைந்து அழுதுகொண்டிருக்கிறார். தம்பி லக்ஷ்மணன் அண்ணா! இது நம்முடைய போறாத காலம். தாங்கள் இதற்காக இப்படிப் புலம்புவதா? என்று கூறிட......

சேரன்:-மறையவரே!என்னசொன்னான் அந்தஇலக்ஷ்மணன்? சீதையை எவனோ களவாடிக்கொண்டு போனானென்று தெரிந்துமா அண்ணனுக்குப் போறாதவேளை, போனால் என்ன என்று கூறினான்?

புரா:- ஆமாம். இராமருடைய சோகத்தைத் தணிக்க......

சேரன்:- சரி. பிறகு கூறும் கேட்போம்.

புரா:- ஆரண்யத்திலே அலைந்து திரிந்து வருகையிலே, ஸ்ரீராமச்சந்திரருக்கு, வானரகுலத்தலைவரான சுக்ரீவனுடைய சிநேகிதம் கிடைத்தது. சுக்ரீவனுக்கும் அவன் அண்ணன் வாலிக்கும்பகை. இராமர் வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டம் தருவதாகவாக்களித்தார்.

சேரன்:- யார் வாக்களித்தது? மனைவியை இழந்து எப்படிக்கண்டு பிடிப்பது என்று மார்க்கம் தெரியாது மருண்டு போயிருந்த இராமன், வாலியைக் கொல்வதாக வாக்களித்தானா? என்ன மறையவரே! வேடிக்கையாக இருக்கிறதே. வாலியின் வீரதீர பராக்கிரமத்தைப் பற்றிப் பலர் கூறுவர்.........

புரா:- ஆமாம், ஆனால் ஸ்ரீராமச்சந்திரர் சாமான்யரோ, ஸ்ரீமன் நாராயண மூர்த்தியின் அவதாரமல்லவோ!

சேரன்:- அவதார புருஷருக்குத் தான் மனைவி பறிபோகும் ஆபத்து நேரிட்டது போலும்: சரி அந்த வேடிக்கைகிடக்கட்டும், வாலிக்கும் சுக்ரீவனுக்கும் பகையிருந்தது. அதை கேட்ட இராமர்.........?

புரா:- வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டமளிக்க வாக்களித்தான்.

சேரன்:- பேஷ்! உன் இராமன் பெரிய வஞ்சகனாகவல்லவோ காணப்படுகிறான்.

[புராணீகன் காதுகளைப் பொத்திக்கொள்கிறான்]

சேரன்:— ஆம் மறையவரே! அந்த வஞ்சகத்தைக் காதால் கேட்பது கூடத் தகாதுதான். அண்ணன் தம்பிக்குச் சண்டை! இந்த ஆரிய இராமனிடம் அந்த வானரன் முறையிட்டான். நீதிமானாக, தர்மவானாகஇருப்பின், இருவருக்குள் நேரிட்ட விரோதத்தைப் போக்கிச், சமரசம் உண்டாக்கியிருக்கவேண்டும். அப்பா வாலி! வா இப்படி. ஒரு தாய்வயிற்றிலுதித்த நீங்கள் இப்படி விரோதித்துக்கொள்வதா? இதோபார் என்னை. என்பக்கத்தில் இருப்பது இலட்சுமணன். என் தம்பி. என்னைத்தான் என்சிற்றன்னை பதினாலு ஆண்டு காடு செல்ல வேண்டுமென்றாள். நான் விரைவாகக் கிளம்

(7-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 13—3—49 [காஞ்சி

அபலை அழுகிறாள்

*

அதோ செல்லும் அந்த அபலையைப் பார்! அழகும் இளமையும், தேய்ந்துகொண்டே இருக்கிறது. மேனியின் மெருகு மங்கிவிட்டது—மனம், குமுறலைக் கொண்டு கொண்டு, குழம்பிப் போய்விட்டது. குறுநடை நடக்கும் சிறுவனுடன் சென்றுகொண்டிருக்கும் அந்தப் பெண்ணை, இக்கதிக்கு ஆளாக்கிவிட்ட ஆணழகர், ஆற்றல் மிக்கவர், நாட்டுக்கு நற்றொண்டாற்றியவர், அவர், இக்காரிகையின் இளமைக்கும் எழிலுக்கும், கனி மொழிக்கும் காதலுக்கும் கட்டுண்டு விட்டார் எனவே கைவிடமாட்டார் என்றே ஊரார் எண்ணினர். அவருடைய அன்புரையைப் பருகிய அணங்கும் அவ்விதமே எண்ணினாள். உலகை உதாசினம் செய்யவும் துணிந்தாள். பேதைப் பெண்ணே! இன்மொழி கேட்டு இதயத்தைக் காணிக்கையாகத் தந்துவிட்டாய் – நெஞ்சாழத்தைக் கண்டாயோ — மேல்வாரியாக இருக்கும் மோக அலைகளை மட்டும் நம்பிடாதே, அடித்தளத்திலே, வஞ்சகம் உறங்கிக்கொண்டிருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்தாயா? என்று அவளிடம் சிலர் கூறியபோது அவள் சிரித்தாள், இப்படியும் சில அவநம்பிக்கைக்காரர்கள் உள்ளனரே, காதலின் ஜோதியைக் காணமுடியாத குருடர்களாக உள்ளனரே என்று எண்ணிச் சிரித்தாள். அவர் இவ்வூரின் காவலர்! அறியீரோ? என்று கேட்டாள். ஆம்! அறிந்திருப்பதால்தான், கேட்கிறோம் அவர் நெஞ்சாழத்தை நீ அறிந்திருக்கிறாயா என்பதை என்று மறுகேள்வி விடுத்தனர் — அந்த மங்கை மருளவில்லை. அவர் ஆசையை அலையவிடும் பேர்வழி அல்ல! உறுதி நிரம்பிய உள்ளம். உலுத்தர் வழி செல்பவரல்ல. அவர் என்னை விரும்பினார் என்றால், பல மாதரிடம் மையல் கொண்டிருந்தார், பத்தில் நான் பதினொன்று என்ற முறையிலே அல்ல. ஊரே ஆச்சரியமடைந்தது, அவர் உள்ளத்திலே எனக்கு இடம் கிடைத்தது கண்டு. அப்படிப்பட்டவரா, என்னைக் கைவிடுவார்! அவரா, என்மீதுள்ள அன்பை மறப்பார்! என்றுதான் அந்த அபலை, ஆர்வத்துடன் கூறினாள். ஆயினும் அவள் கைவிடப்பட்டாள் – கலங்கினாள், கண்ணீர் பொழிந்தாள் – கைவிடாதீர் என்று கெஞ்சினாள், காதலின் விளைவான குழந்தையைக் கையில் ஏந்திச் சென்று, நீதி கேட்டாள்! கிடைக்கவில்லை! அபலையானாள்! அலைகிறாள்! ஆற்றுவாரற்று! அவளை, இக்கதிக்கு ஆளாக்கின ஆணழகரோ, ஊர்க் காவலர் எனும் உயர்ந்த இடத்தை அலங்கரித்தபடிதான் இருக்கிறார், ஊராரோ, அவருடைய உள்ளம், கள்ளர் குகை போன்றிருந்ததே என்பதுபற்றி ஒரு சொல் கூறவும் திறனற்றுத்தான் இருந்தனர். காதலித்தவர், கைவிட்டாரே, இது துரோகமல்லவா! கனிமொழி தந்த காரிகையையே இப்படிக் கதியற்றவளாக்கி விடத் துணிந்தாரே, இந்தக் கடின சித்தர், ஊர் மக்களின் நலனுக்காகச் சிறுவிரல் அசைக்கவும் முன்வருவாரா!—என்று சிந்திக்கவில்லை. ஊர்ப் பிரச்னையையும் உலகப் பிரச்னையையும் தீர்த்து வைக்கும் திறனிருப்பதாகக் கூறிக் கொள்பவர், இந்தத் துரோகக் காரியம் செய்தது, அடுக்குமா? என்று கேட்கவில்லை – துணிவு இல்லை – நெஞ்சில் ஈரமும் வீரமும் ஏககாலத்திலே வற்றிவிட்டது. காரிகையைக் கைவிட்டவர், ஊர் மன்றத்திலே இடம் இழக்கவில்லை – உயர்நிலையை இழக்கவில்லை!

பழைய சகுந்தலைக் கதைபோல, பரதன், சதிபதிகளைச் சேர்த்து வைத்து, கதை சுபமாக முடியவுமில்லை. பரதன், சகுந்தலைக்குத் துரோக மிழைத்த துஷ்யந்தனை ஊரார் தூயவன், மேலவன் என்று கூறிடக்கேட்டுத் துடிக்கிறான்.

யார் இந்தக்கண்ணியர்? காதலித்து மங்கையைத் தாயாக்கிப்பிறகு, கைவிட்ட மகானுபாவர் யார்? எங்கிருக்கிறார்?—என்று கேட்கத் தோன்றும்.

யாராக இருந்தால் என்ன! அவர், இன்றும் கண்ணியர்கள் வரிசையிலே வைத்துப்போற்றப்படத்தான் செய்கிறார். கைவிடப்பட்டவள் கதறுகிறாள், அவரோ, காலத்தால் தாக்கப்பட்டு, அனுபவச் சுமையாகிவிட்ட வேறோர் அம்மையுடன், சரசசல்லாப சுந்தரராகவே காலந்தள்ளுகிறார்.

“ஓஹோ! புரிந்துவிட்டது, புரிந்துவிட்டது! இவரைப் பற்றித்தானே கூறுகிறீர்!” என்று, அன்பர்கள், தமக்குத்தெரிந்த ஏதேனும் ஒருகவலை, நாம் குறித்திட்ட கதையுடன் பொருத்திப்பார்த்திடவேண்டாம்.

நாம் கூறுவது காதலித்தவளைக் கைவிட்டு, கதறச் செய்துவிட்டு, வேறோர் இடம் நாடும், வெறிச் செயலை, நேர்மையாளர்கள் கண்டிக்க வேண்டியது முறை, கடமை, என்ற போதிலும், பொதுவாக ஊரார், எப்படி நமக்கென்ன, என்று இருந்துவிடுகிறார்களோ, அதுபோலவே, அரசியல் உலகிலே, ஒருகட்சி, எந்த மக்களைக்காப்பாற்றுவதாக வாக்களித்து எந்த மக்களின் அன்புரையைக் கொண்டு, பதவிக்குவந்ததோ, எந்த மக்கள் மனமார, உறுதியாக நம்பினரோ, அந்த மக்களைத் தவிக்கச் செய்துவிட்டு, மக்களின் நலனை மதிக்கமறுக்கும் சிறுகூட்டத்திடம் சொக்கிக்கிடந்தால், பொதுமக்கள் மனம் பதறினாலும், வெளியே எடுத்துக்கூறத் துணிவின்றிக் கிடக்கின்றனர் என்ற நிலையை விளக்கவே காதலின் கடமையை மறந்த கண்ணியரின் கதையை, எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டோம்.

காங்கிரஸ் கட்சிக்கே இந்நாட்டு, மக்கள் மன்றத்திலே உயர்விடம், மேலிடம், கிடைத்தது. ஏழை பங்காளனாகவே, காங்கிரஸ்கட்சி வளர்ந்தது. ஏழையைக் கைவிடமாட்டேன் என்றே உறுதி கூறிற்று. ஏழை, உளமார நம்பினான்—உறுதியாகநம்பினான், ஊராளக் காங்கிரஸ் கட்சிக்கு வாய்ப்புக்கிடைத்ததும், தன்நிலை உயரும், வாழ்வு மலரும் என்று. கட்சியின் மேம்பாட்டுக்காகப் பணிபுரிந்தான்—தியாகம் புரிந்தான்! ஆனால், பலன் என்ன கண்டான்? எடுத்துக் காட்டிலே குறித்திட்டபடி, ஏமாற்றப்பட்ட ஏந்திழை, சிறுகுழந்தையை எடுத்துகொண்டு தெருவில் அலைவதுபோல, ஏழை, தன் தியாகத்தைக் காட்டியும் நீதி நியாயம் கேட்டுப் பார்த்தும் ஏமாற்றமே காண்கிறான்.

ஏழை கைவிடப்பட்டான் – கதறுகிறான்—கவனிப்பார் இல்லை! காதலித்தவன், கைவிட்டதால், கதியற்றுப் போன காரிகைபோல.

கனிமொழியாளைக் கைவிட்டு

வேறிடம் தேடிக்கொண்ட கண்ணியமற்றவர்போலக் காங்கிரசாட்சியினரும், ஏழையை அழ அழ விட்டுவிட்டு, பண மூட்டைகளுடன், சல்லாபம் செய்கின்றனர்-வெட்கமோ வேதனையோ, துரோகம் புரிகிறோமே என்ற அச்சமோ துளியும் இன்றி.

நேர்மையாளர்கள் சிலர் கண்டிக்கின்றனர்-ஆனால் பொது மக்கள் தமது மனம் திறந்து பேசமுடியாது, குமுறுகின்றனர்.

ஏழையைக் காட்டிக்கொடுத்துவிட்டு, பணமூட்டைகளுடன் காங்கிரசாட்சியினர் கூடிக்குலவும் நிலையை இவ்வாண்டு 'பட்ஜெட்' தெளிவாகக் காட்டுகிறது.

ஏழைக்குப் புதிய புதிய வரிகள்-செல்வவான்களுக்கு, சிந்து, லாலி, உபசாரம், வரிகுறைப்பு!

வருமானவரித் திட்டத்திலே, செல்வவானுக்குச் சாதகமான, மாறுதல். ஏழைக்கோ, அரையணு கார்டு, முக்காலணு! கவர், இரண்டணு! பல புதுப் பொருள்களின் மீது வரி!

சல்லாபம், சீமான்களிடம், ஏழை பங்காளனின் இன்றைய நிலை இது. சரியா? கேட்டால், தீர்ந்தது, கர்ஜனை செய்கிறார் காமராஜர்-யார் நீ! கபர்தார்! சும்மாவிடமாட்டேன்!-என்கிறார். பொதுமக்களின் நிலைமை, நாம் குறிப்பிட்ட எடுத்துக்காட்டிலே காணப்படும் அபலையின் நிலைக்கு வந்துவிட்டது.

காங்கிரசைக் கண்டிப்பதையே வேலையாகக் கொண்டகயவர்கள் என்று நம்மைக் கண்டிக்கும் காமராஜர்களின், கண்களுக்கு அந்த அபலையின் காட்சி தெரிவதில்லை-மமதையோ, மயக்கமோ, காரணம் அறியோம்!

காமராஜருக்குத் தெரியும் நண்பர் ஒ. வி. அளகேசன் — உடை கருப்பு அல்ல, கதர்! கட்சி, காங்கிரஸ்! அவர், இவ்வாண்டு 'பட்ஜெட்' எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி, மன்றமேறிக் கூறியிருக்கிறார். ஒய்வும் சாந்தமும் கிடைக்கும்போது, சல்லடம் கட்டிக்கொண்டு சண்டமாருதப் பிரசாரத்துக்குக் கிளம்பியுள்ள காமராஜர், படித்துப்பார்க்க வேண்டுகிறோம்-அது சிரமம் என்றால், படிக்க, பக்க நின்றாகிலும் கேட்டுப் பார்க்க வேண்டுகிறோம்.

"நிதி மந்திரி சோஷியலிஸ்டு தத்துவத்தை உடையவராயினும் பணமூட்டைகளைத் திருப்தி செய்ய முனைந்துவிட்டார். உதவித்தச் சிறிதும் அருகதையற்றவர்களுக்கு அவர் உதவி செய்கிறர். ஸ்ட்ரைக்குகளைக் குறைத்துஉற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் தொழிலாளர்கள் தங்களுடைய பங்கைச் செய்து விட்டனர். ஆனல் முதலாளிகளோ, சர்க்கார் வெளியிட்ட கடன் பத்திரங்களைக் கூட வாங்கவில்லை. இந்தப்பட்ஜட்டின்மூலம் உதவி பெறும் பணமூட்டைகள் சிறிது கூடத் தேசபக்தியற்றவர்கள்."

"அவர் தந்த 'சூடு' போதாது, என்று அன்பர் கருதுவாராயின், இதோ மேலும் சில-ஆனால் யாவும், மூவர்ணக்காரரின் முழக்கமேதான், கருப்புடையான் கண்டனம் அல்ல!

"புதுவரிவிதிப்புயோசனைகள்ஏழைகளின் வயிற்றில்தான் அடிப்பதாக இருக்கின்றன. இப்பொழுதுள்ள சர்க்கார் பணக்காரர்களால் பணக்காரர்களுக்காகவே நடத்தப்படும் சர்க்கார்போல் காணப்படுகிறது" — இது தேசியவாதி, திருமல்ராவ் என்பவர் தரும் சூடு.

"இந்த பட்ஜட்டில் ஒரு அம்சமாவது ஏழைகளுக்கு உதவி புரிவதாக இல்லை" — என்று கூறுகிறார், கேசவ ராவ்.

"பாமர மக்களைப் பொறுத்தமட்டில் பட்ஜட் திட்டங்கள் மிகவும் ஏமாற்றமாகும்" என்கிறார் திருமதி அம்மு சுவாமிநாதன்.

"எளியவர்களின் வயிற்றிலடித்து, யார் உதவி பெற அருகதையில்லையோ, அவர்களுக்கு பட்ஜட் உதவி அளிக்கிறது" என்று கண்டிக்கிறார், சந்துபாய் தேசாய்.

"இந்தப் பட்ஜெட், மொத்தத்தில், கஷ்டத்தைக் கண்டறியாத முதலாளித்வத்திற்கு அசல் கொம்புத்தேனில் பிசைந்தெடுத்த பஞ்சாமிர்தம்." என்று நேதாஜி எனும் இதழில், பசும்பொன் முத்துராமலிங்கம் எழுதுகிறார்.

இவர்கள், காமராஜர் போலவே, காங்கிரசார்தான் — வைரம் பாய்ந்த தேசியவாதிகள்! இவ்வளவு நேர்மையாளர்கள், ஏழையைக் காங்கிரசாட்சி கைவிட்டு விட்டதைக் கூறுகிறார்கள்! முதலாளிகளுடன் கூடிக் குலவுவதைக் கூறுகிறார்கள்.

அபலை அழுகிறாள்! ஆணழகரோ, ஊரில் முதல்வராய், உயரிடம் அமர்ந்து, உத்தமர், என்று கருதப்பட்டு இருக்கிறார்.

இந்தநிலை, எத்தனை நாளைக்கு நீடிக்கும்?

ஏழையின் கண்ணீர் வெற்றிபெருமலாபோகும்! வரலாறு, திட்டமாகக் கூறுகிறது, ஏழையின் கண்ணீர் புனல்மட்டுமல்ல, கனலாகி, எத்தகைய கொடுங்கோலாட்சியையும் கருக்கிவிடக்கூடியது என்று.

அந்தநாள் வரும்வரையில், அபலை அழத்தான் வேண்டும்!

❀

கல்சுமந்த கசடர்

5-ம் பக்கத் தொடர்ச்சி

பினேன். என் தம்பி இலட்சுமணன் என்னைவிட்டுப் பிரிய மனமின்றி, தானும் வனவாசம் ஏற்றான். இப்படி இருக்கவேண்டும் அண்ணன் தம்பி ஒற்றுமை என்று கூறியிருக்கவேண்டாமா? அதைவிட்டான். அண்ணன் தம்பிக்குள் கிளம்பின சண்டைக்குள் புகுந்தான் [இதைக் கேட்டுக்கொண்டே வந்து நின்ற வில்லவன்]

வில்:- மறைந்திருந்து அம்பெய்தி வாலியைக் கொன்றான்.

சேர:- (திரும்பி) மறைந்திருந்தா?

வில்:- (புராணிகரை நோக்கி) கூறுவதுதானே மறையவரே! மறைந்திருந்து, மரத்தின் பின்புறமிருந்து தானே, இராமன் வீரவாலியின்மீது அம்பெய்திக் கொன்றான்.

புரா:— அப்படித்தான் கதை......

வில்ல:- இப்படி நெருக்கடியான கேள்வி கேட்டால் இது கதை. கேள்வி கிளம்பாத வரையிலே அது கடவுள்புராணம். மன்னா! இதுபோல நயவஞ்சகம், துரோகம், சதி, முதலியவை நிரம்பிய பல கதைகள்தான் ஆரியருக்குள்ள புராணக் கதைகள்.

சேர:- சேச்சே! என்ன இருந்தாலும் ஒருவீரன், மன்னன், வாலியை மறைந்திருந்து கொல்வது மிக மோசம், கேவலம்..............

புரா:- (வில்லவனைநோக்கி) பேடித்தனம், கூறுமே வில்லவரே!

வில்ல:-எனக்கு அந்தச்சிரமமின்றி தாங்களேதான் கூறி விட்டீர்களே, அந்தக்கோழைத்தனமும் சுயநலத்தோடு கூடியது.

புரா:- என்னப்பா சுயநலம்? இஷ்கிந்தையை இராமர் ஸ்வீகரித்துக்

கொண்டாரோ? சுக்ரீவனுக்கல்லவோ பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

வில்ல:-பட்டங்கட்டினார்?எதற்கு? வானரப்பட்டாளத்தை அரக்கர் படைமீது ஏவ.

சேர:- உண்மைதான், சுக்ரீவனுக்கும் இராவணனுக்கும் ஒரு விரோதமும் கிடையாது. ஆனால்சுக்ரீவனுடைய படைதான் இராவணப் படையைத் தாக்கிற்று.

வில்ல:- இருதரப்பிலும் நஷ்டம், ஆரியப்படையோ அயோத்தியிலே நிம்மதியாக இருந்தது.

[இரு வீரர் ஓடிவந்து வணங்குகிறார்கள்]

வில்ல:- ஏன்? என்ன! ஏன் இப்படி அவசரம்?

வீரன்:- மன்னா! வணக்கம். தமிழ் நாட்டை இழிவாகப் பேசுகின்றனர்.

வில்:- எந்தப்பித்தர் பட்டியிலே கண்டாய் அந்தச் சத்தற்ற ஜன்மங்களை? தமிழரைத்தாழ்வாகப் பேசும் அளவு தலைக்கு வெறி யேறிய தருக்கர் யார்?

வீரன்:- கங்கைக் கரையிலே கனகன், விஜயன், என்று இரு ஆரியமன்னர்கள் உள்ளனர்.

சேர:- ஆரியமன்னர்! ஆரியரிலே மன்னர்களும் உள்ளனர்!!

வில்:- மன்னராக இருப்பதுடன், மமதையாளராகவும் உள்ளனர், அந்தப்பதர்கள். நமது தமிழ் மரபினைக் குறித்துக் கேவலமாகப் பேசினராம். கேலி செய்தனராம் தமிழ்க் குடியினரை. கேட்டீர்களா இந்தக் கெடுமதியாளர்களின் போக்கை! சிங்கத்தைக் கேலி செய்யும் செந்நாயைக் கண்டதில்லை. விழி பழுதானவன் வழி காட்டுவோனை கேலி செய்ததில்லை, வீணர்கள் வீரர்களைப் பழிக்கின்றனர்.

சேரன்:- ஆகா! அவ்வளவுக்குத் துணிந்துவிட்டனரா? இடம் கிடைக்காது திண்டாடி இங்கேவந்த சடங்கள் இப்போது படமெடுத்தாடும் பாம்பாகிவிட்டனவா? ரோம் நாட்டு வீரரும், யவனநாட்டுத் தீரரும் தமிழரின் வீரத்தைப்பாராட்ட, கலிங்கமும், காந்தாரமும் வங்கமும் அங்கமும் மூவேந்தரின்திறத்தைப்பாராட்டியிருக்க பிழைக்க, வந்த கூட்டம் நம்மை இழிவாகப் பேசுவதா? தமிழகம் அவ்வளவு தாழ்ந்துவிட்டதா?

வில்:- திக்கெட்டும் புகழ் பரப்பிய தீரனே!

சேர:- போதும் நிறுத்து, எட்டுந் திக்கும், என் புகழ் பரவிற்றென்று, இங்கே நின்று புகழ்ந்து பேசுகிறாய், அங்கே அந்த ஆரியமன்னர் என்னையும், உன்னையும், நம்மைத் தாங்கி நிற்கும் தமிழகத்தையும் தாழ்வாகப் பேசினர்.

வில்:- கட்டளை யிடுங்கள் காவலரே! அந்தக்கருத்தறியாக் கயவரின் குருதி கங்கையிலே கலக்கச்செய்கிறேன். வீங்கிக்கிடக்கும் தோள் எதற்கு? தூங்கிக்கிடக்கும் இந்த வாள் எதற்கு? தங்கள் தாளிலேஅந்தத்தருக்கரின் முடியினைக்கொண்டு வந்து வைக்கிறேன். அவர்கள் நாடுகள் காடாகும். மாளிகைகள் மண்மேடாகும். வயல் வெளியாகும். பிணக் குவியலைக் காட்டுகிறேன்.

சேர:- வில்லவா! உன்வீரப்பேச்சு என்மனப்புண்ணைக்கொஞ்சம் ஆற்றுகிறது. ஆனாலும் அறிவும்ஆற்றலும் அற்ற கூட்டம் ஆண்மையாளராம் தமிழரைக் கேலி செய்ததுபற்றிஎண்ணினால் என் உள்ளம் பதறுகிறது. எங்கிருந்துபிறந்தது அந்தத்துணிவு? வடநாடு இப்போது எந்தவகையிலே உயர்ந்துவிட்டது. ஏன் இந்தமமதை பிறந்தது?

வில்:- வடநாடு ஆரியக்காடாகிவிட்டது. மன்னர் மன்னவா! அங்கு இப்போது போர் என்றால் மன்னரும், வீரரும் எதிரியை முறியடிக்க எவ்விதம் தாக்குவது? வட்டவடிவிலே படையை அமைப்பதா? விலாப்புறத்தில் தாக்குவதா? வில்வீரரை முதலிலே நிறுத்துவதா? வேழப் படையை அனுப்புவதா? என்று போர்முறை பேசிடுவர். புரோகிதக் கூட்டம் குறுக்கிட்டு, இன்ன யாகத்தை இவ்விதம் இன்றிருந்தே செய்தால் இந்திரன் வஜ்ராயுதத்தைத்தருவான். இத்தனைவேளை இத்தனை ஆயிரம் ஆரியருக்குச் சமாராதனை நடத்தினால் அக்கினிபகவான் அருள் புரிவான். எவன் எதிர்த்தாலும்வெற்றிநமக்கேகிடைக்கும்என்று புளுகுவர். மன்னன் மந்திரியைப் பார்ப்பான்: மந்திரி பொக்கிஷக்காரனைப்பார்ப்பான். பூசுரன் செலவுக் கணக்கைக் கூறுவான். பொருளைப் பெறுவான். களத்திலே வீரர்களின் விழியிலே வேல்பாயும். பர்ணசாலைகளிலே அந்தணன் வயிற்றிலே வகை வகையான உண்டி பாயும். போரிலே வீரர்பல்லாயிரவர் ஆர்ப்பரிப்பர். ஆலயங்களிலே அந்தணர், அந்தி பூஜை அர்த்த ராத்திரி சேவை என்று காரியங்களிலே ஈடுபடுவர். வீரனின் இரத்தம் அங்கே சிந்தும். இங்கே வேதியக் கூட்டம் விலாப்புடைக்கத் தின்று, தின்றது செரிக்கச் சந்தனம் பூச, பூசிய சந்தனம் கீழே சிந்தும். அமளியிலே அங்கங்கள் அறுபடும்; இங்கு அரசாங்கப் பொக்கிஷம் அந்தணர் ஏற்பாட்டால் குறைவுபடும். இந்த முறையிலே ஆரியம் அங்கு வேலை செய்கிறது. அரசுகளை அழிக்கிறது அவனிகாவலா!

சேரன்:- ஆற்றோரத்திலே ஆடு மேய்த்து, மலைச்சரிவிலே மாடு மேய்த்து மானையும் பன்றியையும் வெட்டித் தின்று, நெருப்பையும் நீரையும் கும்பிட்டு, சோமரசமும் சுராபானமும் பருகி, பௌண்டரீக யாகமும் பிறவும் செய்துகிடந்த கூட்டம், கோட்டைகளைத் தகர்த்து, கொத்தளங்களைத் தூளாக்கி படை பல வென்று தடை பல கொன்று தன்மானத்தையே தரணிவாழ் மக்கள் போற்றவேண்டும் எனப் பரணி பாடி வாழும் தமிழரை, நம்மை நிந்திப்பதா? பச்சை கண்டு இச்சை கொண்ட நச்சு நினைப்பினர் செங்குருதி பாய்ச்சி செந்தமிழர் வீரத்தை நிலைநாட்டி தங்கக் கோட்டைகளிலே வைரமணிகளென ஒளி விட்டு விளங்கும் வீரராம் தமிழரை,கேலிமொழிபேசுவதா? ஆஹா! அவ்வளவு துணிந்து விட்டதாஅந்த ஆற்றலற்ற கூட்டம்! எவனுடைய தயவு கிடைத்துவிட்டதாம் அந்தப் பவதிபிக்ஷாந்தேகிகளுக்கு!யார்அவர்களுக்கு துணை? தேவனா! மூவனா? தேய்ந்து வாழும் சந்திரனா? தெருப் புழுதியுடன் விளையாடும் வாயுவா? சாக்கடையிலும் சரசமாடும் வருணனா? எந்தக் கற்பனைக் கடவுளை நம்பி இந்தக் காரியம் செய்யத் துணிந்தனர்?

வில்லவன்:- யார் முன்னின்று, ஆரிய மன்னருக்கு இந்தத் தைரிய மளித்திருந்தாலும் சரி, மன்னர் மன்னவா! மண்ணிலே என் உடல் வீழ்வதாயினும் சரியே அந்த மாற்றார்களை மண்டியிடச் செய்வேன். இது உறுதி. சத்தியம். தமிழகத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். போர் தொடுக்க உத்தரவு அளியுங்கள்.

சேரன்:- ஆம்! போர்தான்.

காட்சி 4.

இடம்:- பாசறை

நிலைமை:- படைஅணிவகுப்பு. மன்
னர் பார்வையிட வருகிறர்.
படையினர் மன்னரை உற்
சாகமாக வரவேற்கின்றனர்.

படையினர்:- மன்னர் மன்னவன்
வாழ்க! தமிழ் மாநிலம்
வாழ்க! சேரன் செங்குட்
டுவன் வாழ்க!

மன்னன்:- தமிழ்மாநிலம் வாழ்க!
வீரர்காள்; உண்மை உரை அது.
தமிழ் மாநிலம் வாழ அதன் கீர்த்தி
பரவ உங்கள் குருதியைக் கொட்ட
வேண்டுமென்று, கேட்டுக்கொள்
ளவே இன்று இங்கே உம்மை
அழைத்தேன். ஆரிய நாட்டின்மீது
படையெடுக்க நாம் தீர்மானித்து
விட்டோம். மண் பெண் பொன்
என்ற மூன்றுக்காக மாநிலத்திலே
போர் மூளுவது உண்டு. நாம் மண்
வேண்டியோ, பெண்தேடியோ, பொன்
கோரியோ போருக்குக்கிளம்பவில்லை.
மாநிலத்தின் பூந்தோட்டம் தமிழகம்
மறக்குடித் தமிழரின் மதிமுகவதி
கள் மயக்கமொழி பேசி மஞ்சமிழுப்
போனே தயக்கமின்றித் தழுவிடும்
வழுக்கிவிழுந்த வனிதையரல்ல.
வீரப்பெண்மணிகள்! பொன் நமது
காலடியிலே! நமதுமணிமாடங்களிலே
தேனிடையூறிய செம்பவள இதழ்ச்
சேயிழையார் தத்தமது காதலரு
டன் தென்றலையும் திங்களையும்
வென்று வாழ்கின்றனர். மண் பெண்
பொன் எனும் மூன்றிற்குமல்ல நாம்
போரிடுவது. மானத்துக்கு. பல்லைக்
காட்டி வாழ்ந்தகூட்டம் தமிழகத்
தின் எல்லையைத்தாண்டி ஓர் கொல்
லையை ஆண்டு வருகிறது. அது புன்
னகைப் பூந்தோட்டமல்ல. செந்
தமிழ் செழிக்கும் சோலையுமல்ல:
கங்கைக்கரையோரத்திலே கசடர்
இருவர் கனகன், விஜயன் எனும்
பெயரினர், அரசர்களாக உள்ளன
ராம், சிறிப்போரிடும் வேங்கைகள்
உலாவும் காட்டிலே சிறுநரிகள் உள்
ளது போல! அங்கு அவர்கள் வாழ்
வதைநாம்தடுத்தோமில்லை, பொருட்
படுத்தவுமில்லை. மல்லிகைத் தோட்
டத்தின் வேலி ஓரத்தில் உள்ள
கள்ளி என்று அதனை மதித்தோம்.
அந்தக் கொல்லைக்காவலர்
நாமெல்லாம் கல்லாகாதிருக்கும்இந்த
நாளில், உமது கரத்திலே கட்கமும்
கருத்திலே வீரமும், உடலிலேதமிழ்
இரத்தமும், உயிரிலேதன்மானமும்,
விளங்கும் இந்த நாளிலே, நான் நெடு
மரமென நின்றிருக்கும்போது, என்
முன்னோர்களின் வீரதீர வெற்றி
களையறிந்து மறவாதிருக்கும் நான்
மண்டலத்தை ஆளும் நாளில், அந்த
மமதையாளர்கள், மனுசந்ததியார்
தமிழரை, தமிழகத்தை, தமிழ்
வீரத்தைதன்மானத்தைப்பழித்துப்
பேசினர், இழித்துரைத்தனராம்.
என் ஆட்சியிலேநேரிட்டது இந்தஅவ
மானம். நான் வெட்கப்படுகிறேன்
வீரர்காள். போர்ப்புலிகளாகிய
உங்களை ஆளும்பாக்கியம் பெற்ற
நான் தமிழரின் வெற்றிச் செய்தி
களை விருந்தாக அளித்திடுவது
முறை. கோலளித்தமைக்கு நான்
செய்யவேண்டிய கடமை, கைம்மாறு.
ஆனல் நான், உங்கள் முன்னல்
மூவேந்தரில் முதல்வன் என்று
பேசப்படும் நான், உங்கள் முன்
இதோ நிற்கிறேன் ஆரியர் தமிழரை
இழிவுபடுத்தினர் என்ற செய்தி
யைக் கூறிக்கொண்டு. வாள் ஏன்
எனக்கு! முடி ஏன் எனக்கு? தமிழ்
மண்ணிலே நான் வாழ்வானேன்?
தோழரே! நான் ஓர் ஓதியமரம்
என்பது போலும் அவர்தம்
நினைப்பு: சேரமண்டலத்திலே வீரர்
இல்லையா, இந்தச் செருக்கரின் சிரம்
அறுக்க. போர் வீரர் கூட்டம் கூனி
விட்டதா? போர்த்திறம் இழந்
தோமா! தோள்வலியும் மனவலியும்
போயினவா? முன்னோரின் புகழுக்கு
நாம் மாசுகளா? முதுமொழிகளுக்கு
கரையான்களா? ஆண்மையற்ற கூட்
டமா? அஞ்சிவாழும் ஆமைகளா?
நயவஞ்சக நரிகளா? நாமா? திருஇடத்
தவரா? ஒருபோதும் இல்லை. நாம்
ஏறுகள். நாம்தமிழர். கொலைவாளைத்
தூக்குவோம் கொடுமை களைவோம்.
மாற்றானின் ஆயுதங்களை நமது
மார்பு எனும் மதிலில் வீசச்செய்
வோம், மகிழ்வோம். உமதுகுருதியைக்
கொட்ட களத்திலே பிணமாவதானு
லும் அதற்கும் அச்சாரம் வாங்கி
விட்டேன். உங்கள் வீரத்தின்மேல்
ஆணையிட்டேன்: ஆரிய மன்னருக்கு
இறுதிச்சீட்டு அனுப்பி விட்டேன்;
என்னுளிலே என்தமிழர் இழிமொழி
கேட்டும், வாளாயிருந்தனர் என்ற
வசை மொழியை என் இரத்தத்
தைக் கொண்டு கழுவிடத் தீர்மா
னித்து விட்டேன். அதைக் காண
வாரீர் என்று உம்மை அழைக்
கிறேன். தமிழகம் காணிக்கை கேட்
கிறது; வீரத்தை, தியாகத்தைக்
கேட்கிறது: இங்கே வீரர்கள் இல்
லையா? ஆண்மையாளரே! கிளம்புங்
கள். சிங்காரத் தமிழகத்தைச் சின்
னட்கள் மறந்திருங்கள். காதலை, கவி
தையை, காட்சியை, மறந்திடுங்கள்.
வானமேகூடாரம், தரையே பஞ்சணை
ஆயுதங்களே தோழர்கள். இதற்
கழைக்கிறேன் உம்மை. உயிரைக்
கரும்பெனக் கருதுவோன் விலகட்
டும். மானத்தைப் பெரிதெனமதிப்
போர் வாளை முத்தமிட வரலாம்.
வாகை சூடத் தமிழகம் நம்மை
அழைக்கிறது. பெற்று வளர்த்து
பெருமைப்படுத்திய தமிழகம்
அழைக்கிறது. உங்கள் தந்தையர்
நாடு அழைக்கிறது! வர இசைபவர்
யார்?

படையினர்:— எல்லோரும்! எல்
லோரும். (தொடரும்)

IN THE MATTER OF INDIAN COMPANIES ACT 1913, AND THE CONJEEVARAM KANDAN MILLS LIMITED [UNDER LIQUIDATION].

NOTICE.

[Section 208-E read with Section 206]

It is hereby notified for the information of those whom it may concern [the Directors and the Members of the Conjeevaram Kandan Mills Ltd.,-under liquidation] that in conformity with the Special resolution passed by the Directors and the Members of the abovesaid Company on 2nd February, 1948, duly publshed in the Madras Fort St: George Gazette-Part II, Page 146, dated the 10th February 1948, the liquidation proceedings have been completed and the accounts finally settled are kept open to those concerned and interested.

It is also further notified that the final meeting of the Board of Directors and the memders will be held at No: 192-193 Hodgsonpet, Kancheepuram, on Saturday the 16th April 1949 at 5 p. m., for the purpose of concluding the winding up affairs of of the abovesaid Company under the provisions of the Indian Companies Act, 1913. All are requested to attend.

A. K. Thangavel
LIQUIDATOR.

1942—1948

4-ம் பக்கத் தொடர்ச்சி

தம்பி, நாளைக்கு சுயராஜ்யசர்க்கார்லே மாட்டிண்டு, திண்டாடி, தேம்பறபோது, நான், வர்ரேண்டி, உங்க ஆத்துக்கு, உனக்குத் தேறுதல் சொல்ல.........

கம:- போதும்,வாயை மூடுடி-என்னமோ, பால்ய சினேகமாச்சேன்னு, உன்னோடே வந்து பேசினேன்—இங்கிதம் தெரியாமப்படிக்கு உளறிண்டிருக்கே-இங்கே வந்ததே பிசகு...... உன்னிடம் சமாதானம் பேசினது அதைவிடப் பிசகு.........சுயராஜ்ய சர்க்காரிலே, உங்க ஆத்துக்காரர், போட்டதுதான் சட்டமா இருக்கப் போறதாக்கும்,-சொப்பனம் கண்டுண்டு இருடி-சொப்பனம்-

கா:--சொப்பனமில்லேடி--ஜோதிடம்டி, முண்டே!

கம:-- வாயை அடக்கடி,அறுதல்.

கா:-- போடி வெளியே, பொட்டி முண்டே............

க:-- நாய் நுழையுமாடிஉன் வீட்டிலே......வா யா டி.........அக்ரமக்காரி, என்னடி இது விளக்குமாத்தைத் தூக்கிண்டி வருகிறே...அடிப்பாவி......வேண்டாம்.........விநாசகாலே விபரீத புத்தின்னு ஆடுகிறே-அழிஞ்சு போயிடுவே......

1948

காந்தா:--கமலம்! கமலம்!

க:--அடடே!காந்தாவா?வாடிம்மா, வா. எவ்வளவோ காலமாச்சு பார்த்து. ஏதோ விஷக்கடி வேளை நாம் இருவரும், பால்ய சினேகமா இருந்தும், முன்னே, வீணாசண்டை போட்டுண்டோம். எனக்கு மனசு நிம்மதியே இல்லை. பம்பாய்க்குப் போன பிறகு கூட அடிக்கடி, எனக்கு உன் கவனமேதான்......

காந்:- ஏண்டி, பழைய குப்பையைக் கிளறிண்டிருக்கே. நீ, பம்பாயிலே இருந்து வந்திருக்கேன்னு, பார்வதி சொன்னதும், உன்னைப் பார்க்கவேணும்னு ஒரே ஆவலா இருந்தது. சௌக்யந்தானே......?

க:- இருக்கேண்டி, காந்தா! உன் க்ஷேம லாபம் எப்படி......

கா: பகவான், ஏதோ கடைக்கண்ணாலேயாவது பார்க்காமப் போவாரோ? சௌக்யந்தான்! ஆத்துக்காரர்.........

க:- ஆமாண்டி, எப்படி இருக்கார் உங்க ஆத்துக்காரர்......?

கா:- அவர் M. L. A. ஆகி இருக்கிறார்.........

க:- பேப்பர்லே, அதைப் பார்த்தேண்டி......M. L. A. ஆகிவிட்டால் போதுமா? ஏதோ மாதச் சம்பளம் உண்டுன்னு சொல்றா. ஆனா அவருடைய, யோக்யதைக்கும் சேவைக்கும், குணத்துக்கும், இதுதானா......ஒரு பிரமாதம்.........

கா- அவருக்கு, நல்ல மதிப் பேன்னோ, ஊரிலே?

க:- மதிப்பு இருக்கட்டும், வேறே விசேஷம்உண்டா? ஏதாவதுசொத்து சேர்த்தாரோ? நிலபுலம் கிடைத்ததோ?

கா;- தியாகிகளுக்காக ஐந்து ஏகர் தந்தாளே, அந்தத் திட்டத்தின்படி, இவருக்கும் கிடைத்திருக்கு.

கம:- அதைத்தான் கேட்டேன், ஏதோ பாவம், கஷ்டம் பல அனுபவித்து, காலைக்கூடமுறிச்சிண்டாரே, 42லே, இப்ப அவருடைய 'ராஜ்யம்' இருக்கே, ஏதாவது, பலன் கிடைக்காமலா போகும்னு, எண்ணிண்டு தான் கேட்டேன்.

கா:- ஏண்டி கமலா! நாற்பத்திரெண்டிலே என்புருஷனை, நீ கூடத்தானே, கேவலமாக எண்ணிண்டே—கேலியாகப்பேசினே— தேச சேவை, தேசசேவைன்னு சொல்லிண்டு, வாழ்வைக்கெடுத்துக்கொள்றாரே, இது என்ன பைத்யக்காரவேலைன்னு கண்டிச்சயே, கவனமிருக்கோ?

க:- ஆமாம்.........அப்ப யார்டி கண்டா, சுயராஜ்யம் வரும், இவாளுக்கெல்லாம் சுகம் வரும்னு.......

காந்:- அவர் புத்தி தீட்சணியத்தோடுதான், அந்தக் காலத்திலேயே வேலை செய்திருக்கார். 42லே, தண்டவாளம் பெயர்த்திராவிட்டா, இப்போ, அயன் ஐந்துஏகர் கிடைத்திருக்குமோ—என்கிற அல்பவிஷயமாக அல்லடி நான் சொல்றது. எங்க ஆத்துக்காரர் போன்றவா சேவை செய்ததாலேதானே, தேசத்துக்குச் சுயராஜ்யம் கிடைச்சிருக்கு -- ஜனங்களெல்லாம் க்ஷேமமாயிருக்கா!

க:- சந்தேகமென்ன! அவாளுடைய சேவையால்தான், நாடு, சுகப்பட்டது. அவா நாற்பத்திரெண்டிலே, செய்த காரியத்தை, உலகமே புகழறதே—அவாளுக்கு, அதற்காகத்தானே மரியாதை, மதிப்பு, மானியம், தரப்பட்டிருக்கு.

காந்:- கமலா! நான்கூட 1942லே' பயந்துதான் போயிருந்தேன்........ ஆத்துக்காரரை, அசடுன்னுதான், எண்ணிக்கொண்டிருந்தேன்- இப்பத்தான் தெரியறது,' அவருடைய அபாரமான முன்யோசனை—கிடக்கு. உன்தம்பி, எப்படி இருக்கான்—இப்ப சுயராஜ்ய சர்க்கார் நடக்கறதே—இவன்போன்றவாளுக்கு, விசாரணை, தண்டனை, இருக்குமே, 1942-லே, கடுமையாக நடந்துண்டவனாச்சே—என்ன செய்தா, உன்தம்பியை?

கம:- ஒண்ணுமில்லேடி காந்தா! பயப்படாதே. 1942-லே, என் தம்பி பெரிய ஆபத்தான நிலைமையிலேயும் பயப்படாமல்படிக்கு,தன்உத்தியோக காரியத்தைக் கவனித்தான்னு சொல்லி, சர்க்கிள் உத்தியோகமும் ஒரு தங்கமெடலும், கொடுத்திருக்கா, சர்க்காரிலே...............

காந்-:நிஜமாவாச் சொல்றே......?

கம:- ஆமாண்டி காந்தா! இப்ப, தம்பி, சர்க்கிளாகத்தான்இருக்கான். அவனுக்கும் 1942-தான், யோகம் கொடுத்தது - உன் ஆத்துக்காரருக்கும் அதே 42-தான், யோகம்தந்திருக்கு.

காந்:- பாரேண்டி அதிசயத்தை... ......காலை முறிச்சவனுக்கும் இலாபம் கிடைச்சிருக்கு, கால் முறிக்கப்பட்டவருக்கும் இலாபம் கிடைச்சிருக்கு-தண்டவாளத்தைக்காப்பாத்தினான்னு உன்தம்பிக்கு, சர்க்காரிலே பரிசு கிடைத்தது -- தண்டவாளத்தைப் பெயர்த்தார்னு எங்க ஆத்துக்காரருக்கு 5 ஏகர் கிடைத்திருக்கு.

●

சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரர்கள் 'பலர், பலமுறை அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் பாக்கியை அனுப்பாமல் இருக்கிறார்கள். 20—3—49-க்குள் பாக்கி அனுப்பாதவர்களுக்கு எவ்வித அறிவிப்புமின்றிப் பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்படும். பாக்கி அனுப்பும் போதும், கடிதம் எழுதும்போதும் சந்தா எண்ணைக் குறித்தனுப்பவும்.

மானேஜர்
"திராவிடநாடு"

2-ம் பக்கத் தொடர்ச்சி

கிறது – கட்டாயப்படுத்தி வாங்கப்படுகிறது. மேலும் நாட்டின் செல்வம் ஒரு சிலரின் சுகபோக வாழ்வுக்கே பயன்படும்முறையில் அமையும் ஆட்சிக்குப்பெயர் மக்களாட்சி அல்ல என்று கூறுகின்றோம், இவ்வாறெல்லாம் நாம் கூறுவதை, நமது காங்கிரஸ் அன்பர்கள், "இவர்கள் எங்களிடமுள்ள ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகக் கூறும் குற்றச்சாட்டுகள்—இவர்கள் கூறுவதை நம்பாதீர்கள்" என்றே பொதுமக்களிடம் பிரசாரம் செய்தார்கள்—செய்கின்றார்கள். ஆனால், நாம் பலதடவை கூறியிருக்கிறோம், எங்களுடைய நோக்கம் அரசியலைக் கைப்பற்றுவது அல்ல என்று. என்றாலும் எத்தர்கள் ஏமாளிகளிடம் இதுபோல் கூறிவருகின்றனர். காரணம், அவர்களுடைய அரசியல் நிர்வாகம் அலங்கோலமாக இருக்கிறது; அதைப் பொதுமக்கள் தெரிந்துவிட்டால் நிலைமை வேறுவிதமாக மாறிவிடும் என்ற அச்சமே, அவர்களை இவ்வாறெல்லாம் பேசும்படி செய்கிறது. திராவிடர் கழகத்தார் அரசியலைக் கைப்பற்றவே இல்லாததும் பொல்லாததும் கூறிக் காங்கிரஸ் சர்க்காரைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள் என்று பிரசாரம் செய்து, பொதுமக்கள் எங்களிடம் வெறுப்புக் கொள்ளும்படி செய்துவிட்டால், தாங்கள் எதுசெய்தாலும் அதைப் பொதுமக்கள் ஆதரிப்பார்கள்—தங்களைத் தவிர வேறு எந்தக் கட்சியிடமும் பற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற நினைப்போடுதான் காங்கிரஸ் அன்பர்கள் இவ்விதம் பேசியும் எழுதியும் வருகின்றனர்.

"கடைத்தெருக்களிலும், மார்க்கெட்டுகளிலும், மூலை முடுக்குகளிலும் ஆட்சி நிர்வாகத்தின் லஞ்ச ஊழல்களைப் பற்றியே பேச்சாக இருந்துவருகிறது. இது மந்திரிகளின் காதுக்கு எட்டாமல் இருக்கலாம். ஏனென்றால் பொதுமக்களோடு கலந்து பழக அவர்களுக்கு நேரமில்லை"

என்று டில்லியில் பட்ஜெட் கூட்டத்தின் போது 6-3-49-ல் ஆச்சாரிய கிருபளானி பேசியிருக்கிறார். ஒரே உண்மையைக் காங்கிரஸ்காராகிய கிருபளானி போன்றோர் கூறினால், அது அவர்களுக்கும் உபதேசமாகவும், திராவிடர் கழகத்தாராகிய நாம் கூறினால், அது அரசியலைக் கைப்பற்றும் சூழ்ச்சியாகவும் தோன்றுகிறது காங்கிரஸ் அன்பர்களுக்கு! நாவற்பழம் கருப்பு, ஆகையால் அதனை நஞ்சாகவும்; எட்டிப்பழம் பழுப்பு ஆகையால் அதனை அமிர்தமாகவும் கொள்வார் உண்டோ? கருப்புச்சட்டைக்காரன் கூறினால் என்ன? கதராடைக்காரன் கூறினால் என்ன? உண்மையை ஒப்புக் கொள்ளத் தானே வேண்டும்!

• • •

நாம் பலகாலமாகவே கூறிவருகிறோம், வடநாடு வேறு—தென்னாடு வேறு, இரண்டையும் ஒன்றாக இணைத்து ஆட்சிபுரியக் கூடாது என்று. பழக்க வழக்க கலாச்சாரங்கள் நமக்கும் வடநாட்டவருக்கும் வேறு என்பதால் மட்டுமல்ல நாம் இவ்விதம் கூறுவது. பொருளாதாரத் துறையில் நாம் வடநாட்டவரால் சுரண்டப்படும் கொடுமை மாற வேண்டுமென்பதற்காகவுமே தான் நாம் அவர்களோடு இணைந்து வாழ முடியாது—கூடாது என்று கூறுகிறோம். ஆங்கிலேயன் நம்மை ஆண்டபோது அவன் நம்முடைய செல்வத்தின் பெரும்பகுதியை எடுத்துக் கொண்டதோடு, வடநாட்டுவியாபாரிகளும் நம்முடைய செல்வத்தின் பெரும்பகுதியைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். வெள்ளையன் விலகியபின் இப்போது இருவித கொள்ளையும் வடநாட்டுக்கேபோய்ச் சேருகிறது. இதனை நாம் சொன்னால், நாம் காங்கிரசைக் கவிழ்ப்பதற்காகச் சொல்லுகிறோம் என்று கூக்குரலிடும் காங்கிரஸ் தோழர்களுக்குக் கூறுகிறோம், வடநாட்டின் பிடியில் இருந்து தென்னாடு விடுபடவேண்டுமென்று நாம் மட்டும் கூறவில்லை அன்பனே! உங்கள் காங்கிரசில் இருப்பவரே இவ்விதம் கூறுகிறார். இவ்வாண்டு பட்ஜெட்டைத் தயாரித்த நிதிமந்திரி தோழர் கோபால் ரெட்டி அவர்களே கூறுகிறார், வடநாட்டின் பிடியிலிருந்து தென்னாடு விடுபட்டாலன்றித், தென்னாடு பொருளாதாரத் துறையில் முன்னேற முடியாது என்ற கருத்துப்படப் பேசி இருக்கிறார்.

"இன்னும் இந்திய சர்க்கார் சட்டத்தின் கீழ்த்தான் நாம் ஆளப்படுகிறோம் என்பதை மறந்து விடலாகாது. அந்தச் சட்டத்தின் கீழ்தான் நம் சர்க்காரின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. நம்முடைய நிதி நிலைமையை அபிவிருத்திசெய்து கொள்ள இன்னின்ன வரிதான் நாம் விதித்துக்கொள்ளலாம் என்று இந்திய சர்க்கார் சட்டம் கூறுகிறது...... புகையிலை வரியை இராசகோபாலாச்சாரியார் கொண்டுவந்தார். அதுவும் இப்போது மத்யசர்க்காருக்குப் போய்விடுகிறது. நமக்கு இவர்கள் நஷ்டஈடுதான் கொடுக்கிறார்கள்"

என்று பேசியிருக்கிறார். ஆனால் தோழர் கோபால் ரெட்டி இவ்விதம் பேசியது, உண்மையை உள்ளபடியே கூறவேண்டுமென்பதற்காப் பேசிய பேச்சல்லவென்பதையும், பட்ஜெட்டில் துண்டு விழுவதால் அதனை ஈடுசெய்யப் புதுவரி போட்டாக வேண்டுமென்பதற்காகப் பூசி மெழுகப்பட்ட பேச்சுத்தான் என்பதையும் நாம் அறிவோம். என்றபோதிலும் உண்மை எந்தக்காரணத்தைக் கொண்டோ வெளிப்படுத்தப்பட்டுவிட்டதென்பதை இனி எப்படி மூடிவைத்தாலும் மறைக்கமுடியாதநிலை ஏற்பட்டுவிட்டதை, நம்மீது சாடிசொல்லும் சாய்ந்த மதியினரும், அதனைப் பொறுப்பற்ற முறையில் கேட்டுப் பொழுது போக்கும்பொது மக்களும் இதனை உணரவேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

மத்திய சர்க்காரின் தலையீடு மாகாண சர்க்கார்களுக்கு இருக்கக் கூடாது—அதற்கு ஏற்றமருந்துநாட்டுப் பிரிவினை ஒன்றுதான்என்று நாம் பல காலமாகக்கூறிவந்த ஒரு மறுக்க முடியாத உண்மையை நிதி மந்திரியார் ஒளிவு மறைவு இன்றி ஒப்புக்கொண்டாரே என்பதற்காக அவரை அந்த வகையில் நாம் பாராட்டுகின்றோமாயினும், மத்ய சர்க்கார் நம்முடைய பணத்தை எடுத்துக்கொண்டு போவதற்கே இன்னும் உடந்தையாக இருப்பதற்கறிகுறியாக மேலும் மேலும் புதுப் புது வரிகளைப் போட்டு ஏழைகளை வாட்டி வதைக்கும் கொடுமையை நாம் ஒருபோதும் வரவேற்கமாட்டோம்.

மத்ய சர்க்காரின் தலையீட்டால் மாகாண சர்க்காரின் செல்வம் சுரண்டப்படுகிறது என்பதை நிதிமந்திரி உண்மையாக ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் அவர் என்ன செய்திருக்க வேண்டும்? ஒரே வரியில் ராஜினாமா எழுதிக் கொடுத்துவிட்டு விலகி

(அடுத்த பக்கம் பார்க்க)

காந்தியடிகளுக்கு எதிர்ப் பிரசாரம்

[பாரதி]

"கடவுளே, அனாதரட்சகா, ஆபத்பாந்தவா, தீனதயாளா, எத்தனை நாளைக்கு நான் இப்படி ஈனத்தனமாய்ப் பிச்சை யெடுத்துக்கொண்டு பட்டினி கிடப்பேன்? ஏழைபங்காளா, என் சக்திக்கேற்ற வேலை, தேவைக்கேற்ற ஊதியம் கொடுக்க அருள்புரிய மாட்டாயா? உன்னையல்லால் வேறு கதி யாது?" என்று ஓர் ஏழை கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டான். கடவுள் அவனுக்கு அருள் புரிவதாக இல்லை. என்ன செய்வான்? வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு வழியெல்லாம் பல்லைக் காட்டிப் பிச்சையெடுத்துக்கொண்டு மடியில் ஒரு பிடி அரிசியை வைத்துக்கொண்டு அவன் தனி வழியே சென்று கொண்டிருந்தான்.

நடுக்காடு, நீண்டவழி, சுற்றிலும் ஒருவரும் இல்லை. எதிரே ஒரு ஆள் வருவது தெரிந்தது. கம்பீரமான உடல், களை சொட்டும் முகம், உச்சி முதல் உள்ளங்கால் வரை தவச்சின்னங்கள், சீரிய கூரிய விழிகள், செய்ய திருமேனி, திருமுடி முதலிய அணிகள் அனைத்தும் அழகொளி வீச அந்த ஆள் காட்சியளித்தார். இடது கையில் பிடித்திருந்த வேலாயுதம் அவர் எம்மையாளவந்த ஈசனார் எனவே எண்ணும்படி இருந்தது. ஆள் நெருங்கி வந்தவுடன் அன்பும் அருளும் கலந்து புன்னகை செய்தார். அதிலே சொக்கி மயங்கிய ஏழை அடியற்ற நெடுமரம் போல அவ்வீசனார் திருவடி வீழ்ந்து வணங்கி யெழுந்து மலர்ந்த முகத்துடன் நின்றான்.

வந்தவர் கருணை வெள்ளம் கரைபுரண்டோட வாயார வாழ்த்தினார் "நீடூழி வாழ்க" என்று. ஏழை புளகாங்கிதமடைந்து, "ஐயனே, அடியேன் ஏழை. உம்மைக்கண்டு மகிழ்ந்தேன். வற்றிய வயிற்றிலே பால் வார்த்தது போலிருந்தது தங்கள் வருகை. இனி என் பீடை ஒழிந்தது என்பதில் ஐயமில்லை. வயிற்றுப் பசி கொல்கிறது. அதோ தங்கள் வலது கையிலுள்ள, அள்ள அள்ள வற்றாத அட்சயபாத்திரத்திலிருந்து அடியேனுக்கு ஒருவாய் அன்னம் அருளுவீர்" என்று கேட்கலாயினான்.

வந்த ஈசனார் புன்னகை புரிந்தார். "அன்பனே, என்ன கேட்டாய்? சோறா? ஆகா, அது உனக்குக் கொடுக்கக்கூடியதன்று. தவமுடையவர்களுக்கே அது கிடைக்கும். ஆதலின் நீ அதை மறந்து விடு. மேலும் கேள். கயிலாயத்திலே உன்னையும் என்னையும் படைத்த கனகசபேசனுக்கு ஒரு கனகமாளிகை கட்டத் திட்டமிட்டுள்ளோம். அதற்கு நீ காணிக்கை செலுத்த வேண்டும். உன் மடியிலே உள்ளதே பிடி அரிசி. அது போதும், எடு. எடு சீக்கிரம்" என்று கட்டளையிட்டார்.

ஏழையின் கண்கள் சுழன்றன. பின்பு சிறிது தெளிவு வரப்பெற்று, "ஐயனே, அழகு மெய்யனே, யான் பரம ஏழை. பிச்சைக்காரன். கலி தீர்க்கும் கடவுள் என உம்மை நம்பினேன். என்னிடமே தானம் கேட்டால் நான் எவ்வாறு கொடுக்கமுடியும்?" என்றான். ஐயன் முகத்தில் இப்பொழுது புன்னகையில்லை, "அப்பனே, இது அன்புப் பணி. அப்பனின் நினைவுப் பணி. கட்டாயமல்ல. ஆகவே, தயங்காதே" என்று கூறி அவருடைய கண்களை உருட்டி விழித்து இடது பக்கமாய்ச் சுழட்டினார். அங்கு அவரது இடது கையில் வேல் பளிச்சென்று மின்னியது. அதிலே பொருள் கண்டு கொண்டான் ஏழை. அது போழ்து அவன் மனம் எப்படி இருந்திருக்கும்? அருள் கொடுத்துக் கலி தீர்க்க வந்த அண்ணல் என்று நம்பப்பட்டவர் அடிமடியில் கையைப் போட்டால் அடியார்களின் கதி என்ன?

(3-ம் பக்கம் பார்க்க)

முன்பக்கத் தொடர்ச்சி

யிருக்க வேண்டும். அந்த ராஜிநாமாக் கடிதத்தில், மத்ய சர்க்கார் மாகாண சர்க்காரின் செல்வத்தைச் சுரண்டிக்கொண்டு போவதால் மாகாண சர்க்கார் தன்னுடைய நிர்வாகத்தை நடத்த முடியவில்லை. இந்த நிலைமையில், மேலும் புதுப் புது வரிகளைப் போட்டுப் பொது மக்களைத் துன்புறுத்தும் துரோகத்தைச் செய்ய என் மனச் சாட்சி இடந் தரவில்லை. எனவே என்னுடைய ராஜிநாமாவை ஏற்றுக்கொள்க வென்று முதலமைச்சர் ஓ. பி. இராமசாமி அவர்களிடம் சமர்ப்பித்து விட்டு, டில்லிக்கு அதன் நகல்ஒன்றை அனுப்பிவிட்டு விலகி இருக்கவேண்டும். விலகவில்லை! விலகும் சாடையைக் கூடக் காணவில்லை. என்ன இதன் மர்மம்?

காங்கிரஸ் திராவிடர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம் இதனைச் சிந்தியுங்கள் என்று! கைக்கு வரும் பணத்தை யெல்லாம் வரியாக வாரிக் கொடுத்துவிட்டு வயிற்றைப் பிசைந்துகொண்டு நிற்கும் பொது மக்களைக் கேட்கிறோம் இதுபற்றிச் சிறிது சிந்தியுங்கள் என்று!

●

"விதிக்கு—

—அடிமைத்தனம்"

அண்ணாத்துரையின்

சொல்லோவியம்

அழகிய மேலட்டை 0–2–0

பெரியார், அண்ணாத்துரை, கலைஞர் முதலிய அழகிய படங்கள்

ஒன்றின் விலை 0–5–0

வியாபாரிகட்கு தக்க கழிவுதரப்படும்.

திராவிடன் பதிப்பகம்

P. B. No. 18, வேலூர், N. A.,

"கார்ல் மார்க்ஸ்"

(ஆசிரியர்: எஸ். சதாசிவம்)

நமது நாட்டின் இன்றைய நிலை பற்றியும், இதை மாற்றியமைக்க இந்நூல் உதவும் என்பது பற்றியும் எழுதப்பட்ட, அனைவரும் படிக்கவேண்டிய முக்கியமான புத்தகம்

விலை ரூ 1—0—0

தபாலில் பெற ரூ. 1—5—0

வியாபாரிகளுக்கு 25%

விலாசம்:—

இன்பவாழ்வுப் பதிப்பகம்

R. S. புரம் கோயமுத்தூர்

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.